[22nd September 1955

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes, Sir.

(b) The matter is separately under consideration.

SRI N. K. PALANISAMY : ஒருவர் ரூ 10,000-க்கு மேல் "டொனேஷன்" கொடுத்தால் அவருக்கு ஒரு "ரெப்ரஸென்டேஷன்" கொடுக்கப்படுகிறது. இந்த மாதிரி "நாமினேஷன்"களை குறைக்க வேண்டும். ராதாகிருஷ்ணன் கமிட்டியாரின் சிபார்சுகளின்படி சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : ரூ. 10,000 சமாசாரம் என்னவென்று விளங்கவில்லை. ராதாகிருஷ்ணன் கமிட்டி சிபார்சுகளை அனுசரித்து இப்பொழுது சர்வகலாசாலை சட்டத்தைத் திருத்த வேண்டுமா, திருத்த வேண்டியதில்லையா என்பது பற்றி பரிசீலனை நடந்து கொண்டிருக்கிறது.

DR. K. B. MENON : Is it the intention of the Government to bring into effect all the recommendations of the Radhakrishnan Commission? Or have the Government deferred any decision or taken any decision on the same?

THE HON. SRI C. SUBRAMANIAM : The main question relates only to the amendment of the University Acts in accordance with the recommendations of the University Commission. This matter is under consideration and if the hon. Member wants information with regard to any other recommendation, he may put a separate question.

*Extraction of aluminium from Bauxite Ores in Salem district*

* 2387 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the steps taken by the Government to extract aluminium from the Bauxite ores in Pachamalai and Kollimalai in Salem district?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There are no known deposits of bauxite in Pachamalai and Kollimalai in Salem in Salem district. Bauxite deposits are reported to occur only in the Shevaroy Hills in the Salem district. As already stated in reply to Starred Question No. 853 on the floor of the House on 23rd February 1955 the Planning Commission has been addressed to arrange for an expert study of the development of the Shevaroy bauxite deposits and to include a scheme for their exploitation in the Second Five-Year Plan of the Government of India.

SRI N. K. PALANISAMY : இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தைப்பற்றி விவாதிக்கும்போது இம்மாதிரி அலுமினியம் எடுப்பதை இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்துக் கொண்டாலும் சேர்த்துக் கொள்ளாவிட்டாலும் நாங்கள் எடுத்து நடத்தப் போகிறோம் என்று கனம் நிதி மந்திரி சொன்னார். ஆனால் கனம் விவசாய மந்திரி அவர்கள் சமீபத்தில் ஒரு கூட்டத்தில் பேசும்போது இம்மாதிரி சர்க்கார் எடுத்து நடத்த வேண்டிய அவசியமில்லை, தனிப்பட்டவர்களுக்குக் கொடுக்கப்போகிறோம் என்று சொன்னார். இதிலிருந்து சர்க்காருடைய கொள்கை என்னவென்பது தெரியவில்லை. ஒருவர் சொல்வது மற்றவர் சொல்வதற்கு முரணாக இருக்கிறது. யார் சொல்வது சரி என்று கேட்க விரும்புகிறேன்.

22nd September 1955]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சர்க்காருடைய கொள்கையில் வித்யாசமும் எந்த விதமான முரண்பாடும் இல்லை. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்தாலும் சேர்க்காவிட்டாலும் அதை எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லியிருக்க முடியாது. அவ்வாறு சொல்லவும் இல்லை. இதை எடுத்து நடத்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி வருகிறோம். அரசாங்கத்தின் பங்கைக் கொண்டும் ப்ரைவேட் செக்டாருடைய பங்கைக் கொண்டும், இந்த இரண்டையும் சேர்த்து ஒரு கார்போரேஷன் வைத்து அதை நடத்துவது சுலபம் என்ற யோசனை இந்த அரசாங்கத்தினிடம் இருக்கிறது. அதைத்தான் இந்த அரசாங்கத்தின் சார்பாக சொல்லப்பட்டது.

SRI M. P. SUBRAMANYAM : ஸார், மத்திய அரசாங்கத்திற்கு ஒரு எக்ஸ்பர்ட் கமிட்டியை நியமிக்க வேண்டும் என்று இந்த அரசாங்கம் சிபாரிசு செய்திருப்பதாகக் கூறினார்கள். இதை இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அந்தக் கமிட்டிக்கு சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாகவும் அதைப்பற்றி பரிசீலனை இந்த கமிட்டி செய்யும் எனவும் கூறப்பட்டது. இந்த கமிட்டி என்ன முடிவு எடுக்கும் என உறுதியாக சொல்ல முடியாது. இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் இண்டஸ்ட்ரிசுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்று சொல்லிவரும் இந்த அரசாங்கம் இதுவரையில் இதை பற்றி பரிசீலனை செய்து ஆரம்பிப்பதற்கு ஏன் முடிவு செய்ய வில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அலுமினியம் தொழிற்சாலை அமைப்பது பற்றி அரசாங்கம் ஏற்கெனவேயே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. மேற்கொண்டும் இதில் கவனம் செலுத்தி அந்தத் தொழிலை ஆரம்பிக்க வேண்டுமென்று யோசித்துக் கொண்டிருந்து அதற்கு வேண்டிய நடவடிக்கையையும் எடுத்துக் கொண்டிருக்கிறது.

SRI S. RAMALINGAM : குறிப்பிட்ட இரண்டு மலைகளிலிருந்தும் அலுமினியம் பாக்ஸைட் கனி இருக்கிறது என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது என்று கனம் மந்திரி சொன்னார். ஜியலாஜிகல் சர்வே நடந்து ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஜியலாஜிகல் சர்வே செய்துவிட்டுதான் அங்கு இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அது சேலம் மலையில்தான் இருக்கிறது.

SRI M. P. SUBRAMANYAM : இந்த அரசாங்கம் இது வரையில் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். நடவடிக்கை எடுத்துக் கொண்ட பிறகு இந்த திட்டத்தை நிறைவேற்ற முடியுமா, முடியாதா என்பதையும் அதை எடுக்க முடியுமா என்பதைப்பற்றியும் சொல்வதற்கு ஏதாவது புள்ளி விவரங்கள் அரசாங்கத்தினரிடம் இருக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : முடியுமா முடியாதா என்று சொல்வதற்கு இப்பொழுது முடியாது. மேற்கொண்டு என்ன செய்வது, இந்தத் தொழிலை ஆரம்பிப்பதற்கு என்ன செய்வது என்பதில் இந்த அரசாங்கம் தீவிரமாக கவனம் செலுத்திக் கொண்டு வருகிறது என்பதை கனம் அங்கத்தினருக்கு எடுத்துச் சொல்லுகிறேன்.

### *Colonies for Harijans in rural areas*

* 2388 *Q.*—SRI O. A. NANJAPPA : Will the Hon. the Minister for Religious Endowments and Transport be pleased to state—

(*a*) whether loans are given to Harijans to build houses on the sites assigned to them;